வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் – நாராயணசாமி

தேதி 01.03.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

விவசாயிகள் வளமானவர்களாகவும், அதிகாரம் பெற்றவர்களாகவும் இருக்கும் வகையில் இந்தியாவை உருவாக்குவதற்கு முயற்சி எடுத்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்தியா, மத்திய கிழக்கு ஐரோப்பா இடையே புதிய பொருளாதார பாதையை வகுத்து உலகிற்கே இந்தியா வழிகாட்டும் என பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு இறுதிக்குள் நாடு முழுவதும் 20 ஆயிரம் மக்கள் மருந்தகங்கள் துவக்கப்படும் என்று மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு ஜே பி நட்டா

தெரிவித்துள்ளார்.

நாட்டின் முதல் புல்லட் ரயில் திட்டத்திற்காக இதுவரை 350 கிலோ மீட்டர் தூரம் வரையிலான பணிகள் நிறைவடைந்துள்ளதாக மத்திய ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மோடி கருத்தரங்கு 1 (18)

மத்திய பட்ஜெட்டின் தொலைநோக்கு பார்வையை விளக்கும் வேளாண்மை மற்றும் கிராமப்புற இணையவழி கருத்தரங்கில் பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று பங்கேற்றார். வேளாண்மை மற்றும் கிராமப்புறங்களின் தொகுப்பு என்ற தலைப்பில் பட்ஜெட்டுக்கு பிந்தைய கருத்தரங்காக நடைபெறும் இந்நிகழ்ச்சியில் பங்கேற்பவர்களுடன் பிரதமர் காணொளி காட்சி மூலம் கலந்துரையாடினார். மத்திய பட்ஜெட்டின் அறிவிப்புகளை திறம்பட செயல்படுத்துவதற்கான யுக்திகளை வகுப்பதில் கவனம் செலுத்தும் விதமாகவும், பங்குதாரர்களை ஒன்றிணைக்கும் முயற்சியாகவும் இந்த கருத்தரங்கு நடைபெற்றது. நிகழ்ச்சியில் பேசிய பிரதமர், விவசாயிகள் வளமானவர்களாகவும், அதிகாரம் பெற்றவர்களாகவும்

இருக்கும் வகையில் இந்தியாவை உருவாக்குவதற்கு முயற்சி எடுத்து வருவதாக தெரிவித்தார். விவசாயத்தை வளர்ச்சியின் முதல் இயந்திரமாக கருதி, அரசு விவசாயிகளுக்கு பெருமை சேர்க்கும் இடத்தை வழங்கி உள்ளது என்றும் அவர் கூறினார். விவசாய துறையின் வளர்ச்சி மற்றும் கிராமங்களின் வளம் ஆகிய 2 முக்கிய இலக்குகளை நோக்கி அரசு நகர்ந்து வருவதாக பிரதமர் தெரிவித்தார். பிரதமரின் கிசான் சம்மான் நிதி யோஜனா பற்றி குறிப்பிட்ட அவர், இத்திட்டத்தின் கீழ், இதுவரை 4 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு விவசாயிகள் பெற்றுள்ளதாக தெரிவித்தார்.

மோடி கருத்தரங்கு 2 (11)
இந்த தொகை கிட்டத்தட்ட 11 கோடி விவசாயிகளின் வங்கி கணக்குகளுக்கு நேரடியாக மாற்றப்பட்டுள்ளதாக அவர் கூறினார். மத்திய பட்ஜெட்டில் அரசு பிரதமரின் தன் தானிய க்ரிஷி யோஜனா திட்டத்தை அறிவித்துள்ளது என்றும், இதன்படி, நாட்டிலேயே மிகக் குறைந்த விவசாய உற்பத்தி திறன் கொண்ட நூறு மாவட்டங்களின் வளர்ச்சியில் கவனம் செலுத்தப்படும் என்றும் பிரதமர் தெரிவித்தார். மக்கள் இன்று ஊட்டச்சத்து குறித்து மிகவும் விழிப்புணர்வு அடைந்துள்ளனர் என்றும், தோட்டக்கலை, பால் மற்றும் மீன் வளப் பொருட்களுக்கான தேவை அதிகரித்து வருவதால், இத்துறைகளில் அதிக முதலீடு செய்யப்பட்டுள்ளதாக பிரதமர் தெரிவித்தார். பழங்கள் மற்றும் காய்கறிகளின் உற்பத்தியை அதிகரிக்க பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

உச்சிமாநாடு (14)
இந்தியா-மத்திய கிழக்கு ஐரோப்பா இடையே புதிய பொருளாதார பாதையை வகுத்து உலகிற்கே வழிகாட்டும் என பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். அவர் இன்று புதுடெல்லியில் நடைபெற்ற NXT உச்சி மாநாட்டில் பங்கேற்று பேசினார். இந்தியா உலகளாவிய பல உச்சி மாநாட்டிற்கு தலைமை வகிப்பதாக அவர் தெரிவித்தார். அண்மையில் பிரான்சில் நடைபெற்ற செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள வாய்ப்பு கிடைத்ததாகவும், அந்த மாநாட்டில் இணை அமைப்பாளராக இந்தியா அங்கம் வகித்ததாகவும் பிரதமர் தெரிவித்தார். இதேபோல், ஜி-20 மாநாட்டை இந்தியா வெற்றிகரமாக நடத்தியதாகவும்,

அதில் ஆப்ரிக்க யூனியனை, ஜி-20 அமைப்பில் இணைத்து, உலகின் தெற்கு பிராந்தியத்திற்கு குரல் கொடுத்ததாகவும் அவர் தெரிவித்தார். இந்தியா-மத்திய கிழக்கு நாடுகள், ஐரோப்பா இடையே புதிய பொருளாதார பாதையை வகுத்து, உலகிற்கே இந்தியா, புதிய பாதையை வழிநடத்தி செல்வதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

*மக்கள் மருந்தகம்* (18)

பிரதமர் திரு நரேந்திரமோடியின் திட்டப்படி இந்த ஆண்டுக்குள் 20 ஆயிரம் மக்கள் மருந்தகங்கள் துவக்கப்படும் என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜே பி நட்டா தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் இன்று காலை நடைபெற்ற பிரதமரின் மலிவு விலை மக்கள் மருந்தகங்கள் குறித்த தகவல்களை மக்களுக்கு கொண்டு சேர்க்கும் வாகன சேவையை அவர் கொடியசைத்து துவக்கி வைத்தார். குறைந்த விலையில் தரமான மருந்துகள் மக்களுக்கு கிடைக்கும் விதமாக நாடு முழுவதும் பிரதமரின் மக்கள் மருந்தகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதுகுறித்த தகவல்களை மக்களுக்கு கொண்டு சேர்க்கும் விதமாக இந்த வாகன சேவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வையில் உருவான மக்கள் மருந்தக திட்டம் ஆரம்பத்தில் 80 இடங்களில் தொடங்கப்பட்டு, தற்போது 15 ஆயிரம் இடங்களாக முன்னேறி உள்ளதாக அவர் தெரிவித்தார். மக்களுக்கு மலிவான விலையில் அத்தியாவசிய மருந்துகள் வழங்கி இந்த மக்கள் மருந்தகங்கள் நாட்டு மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளதாக அவர் தெரிவித்தார். இந்த ஆண்டு இறுதிக்குள் 20 ஆயிரம் மக்கள் மருந்தகங்கள் தொடங்கப்படும் என்றும், இதேபோல், அடுத்த ஆண்டு 25 ஆயிரம் மக்கள் மருந்தகங்களை தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

*தன்கர்* (8)

நாட்டில் கடந்த 10 ஆண்டுகளில் ஏற்பட்ட வளர்ச்சி காரணமாக உலக அளவில் இந்தியா அனைவராலும் விரும்பும் நாடாக உருவெடுத்து உள்ளதாக குடியரசு துணைத் தலைவர் திரு ஜக்திப் தன்கர் தெரிவித்துள்ளார். அவர் இன்று புதுடெல்லி பாரத் மண்டபத்தில் நடைபெற்ற சர்வதேச

தீர்வாயம்-இந்தியாவின் அணுகுமுறை என்ற தலைப்பிலான நிகழ்ச்சியில் பங்கேற்று பேசினார். உலக அளவில் இந்தியா அனைத்து துறைகளிலும் முன்னோடி நாடாக உருவாகி வருவதால் சர்வதேச தீர்வாயமாக இந்தியா வளர்ச்சி பெற வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

*புல்லட் ரயில்* (11)

நாட்டின் முதல் புல்லட் ரயில் திட்டத்திற்காக இதுவரை, 360 கிலோ மீட்டர் வரையிலான பணிகள் நிறைவடைந்துள்ளதாக மத்திய ரயில்வேத் துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார். அகமதாபாத் ரயில் நிலையத்தில் நடைபெற்று வரும் மறு சீரமைப்பு பணிகளை ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மகராஷ்டிராவில் இத்திட்டத்திற்கு உத்தவ் தாக்ரே அரசு அனுமதி தராமல் இருந்ததால், கடந்த இரண்டரை வருடமாக இந்த திட்டம் தாமதமானதாகவும் அவர் தெரிவித்தார். தற்போது இத்திட்டம் விறுவிறுப்பாக நடைபெற்று வருவதாகவும் அவர் கூறினார். புல்லட் ரயில் திட்டத்திற்காக ஆழ்கடலில் 2 கிலோ மீட்டர் தூரத்திற்கு சுரங்கப்பாதை திட்டம் நிறைவடைந்து இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

*அமித்ஷா* (9)

மணிப்பூர் மாநிலத்தின் பாதுகாப்பு நிலவரங்கள் குறித்து மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா இன்று ஆலோசனை நடத்தினார். மணிப்பூரில் குடியரசு தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்ட பிறகு அங்கு அமைதி திரும்பி வருகிறது. தங்போது மேற்கொள்ளப்பட்டு வரும் அமைதி நடவடிக்கைகள் குறித்தும், பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும் டெல்லியில் இன்று அவர் விரிவாக ஆலோசனை நடத்தினார். முன்னதாக, நேற்று தலைநகர் டெல்லியில் சட்டம் ஒழுங்கு நிலவரம் குறித்து அவர் ஆலோசனை நடத்தினார். கூட்டத்தில் டெல்லி முதலமைச்சர் திருமதி ரேணுகா குப்தா, மத்திய உள்துறை செயலாளர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

*ஸ்டாலின் (8)*

தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலினின் 72 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு, பிரதமர் திரு நரேந்திர மோடி அவருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். இதுகுறித்து பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், நல்ல நீடித்த ஆரோக்கியத்துடன் வாழ வாழ்த்துவதாக குறிப்பிட்டுள்ளார்.

இதேபோல், காங்கிரஸ் தலைவர் திரு ராகுல்காந்தி, மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன், தமிழக பாஜக தலைவர் திரு அண்ணாமலை, தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி உள்ளிட்டோரும் திரு மு க ஸ்டாலினுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

*சுகாதார துறை இயக்குநர் (5)*

கில்லியன் பாரோ சின்ரோம் என்ற நோய் தாக்குதல் அதிகரித்து வருவதாகவும், புதுச்சேரியில் யாருக்கும் பாதிப்பு இல்லை என்றும் புதுச்சேரி சுகாதாரத் துறை இயக்குநர் டாக்டர் ரவிச்சந்திரன் தெரிவித்துள்ளார். புனே, ஒடிசா ஆகிய பகுதிகளில் இந்த நோய் தாக்குதல் இருப்பது கண்டறியப்பட்டுள்ளதாக தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்................

வேவ்ஸ் ()

உலக ஒலி-ஒளி பொழுதுபோக்கு உச்சி மாநாடு வரும் மே மாதம் 1 ஆம் தேதி தொடங்கி 4 ஆம் தேதி வரை மும்பையில் நடைபெறுகிறது. இதனை ஒட்டி, பல்வேறு தலைப்புகளில் போட்டிகள் நடத்தப்படுகின்றன. அந்த வகையில் யூ-டியூப் ஷார்ட்ஸ் போட்டி குறித்த ஒருசெய்தி தொகுப்பு

யூ-டியூப் ஷார்ட்ஸ் எனும் சமூக வலைதள வீடியோக்களை உருவாக்க வேவ்ஸ் உச்சி மாநாட்டின் சார்பில் Waves explorer challege மூலம் ஒரு அற்புதமான வாய்ப்பு வழங்கப்படுகிறது. இந்தியாவின் பன்முக தன்மை, நம்பகத்தன்மை மற்றும் படைப்பாற்றலை வெளிப்படுத்தும் வகையில் உலக ஒளி-ஒலி பொழுதுபோக்கு உச்சி மாநாடு வரும் மே மாதம் 1 ஆம் தேதி முதல், 4 ஆம் தேதி வரை மும்பையில் நடைபெற உள்ளது. மத்திய அரசின் தகவல்

ஒலிபரப்பு அமைச்சகம், இந்திய ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு சங்கம், ஆகியவை இணைந்து நடத்தும் இந்த உச்சி மாநாட்டை முன்னிட்டு, பல்வேறு போட்டிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 11 நகரங்களில் நடைபெற உள்ள இந்த போட்டியில் வெற்றி பெறும் போட்டியாளர்கள் மும்பையில் நடைபெறும் இறுதி போட்டிக்கு தகுதி பெறுவார்கள். மாணவர்கள் மற்றும் மாணவர் அல்லாதவர்கள், திறன் மேம்பாட்டு பிரிவின் கீழ், குறும்படங்கள் அல்லது விளம்பர மாதிரி படங்களை தயாரித்து அனுப்பலாம். இதனை பதிவு செய்துக் கொள்ள விரும்புவோர் wavesindia.org என்ற இணையதளத்தில் தொடர்பு கொள்ளலாம் என கேட்டுக்கொள்ளப்படுகிறது.

*பாஸ்போர்ட் (8)*

2023 ஆம் ஆண்டு அக்டோபர் 1 ஆம் தேதி அல்லது அதற்கு பிறகு பிறந்த பாஸ்போர்ட் விண்ணப்பதாரர்களுக்கு பொருத்தமான அதிகாரிகளால் வழங்கப்பட்ட பிறப்பு சான்றிதழ்கள் மட்டுமே பிறந்த தேதிக்கான சான்றாக இருக்கும் வகையில் பாஸ்போர்ட் விதிகளை மத்திய அரசு திருத்தி உள்ளது. எனினும், 2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திற்கு முன் பிறந்தவர்கள் பான்கார்ட், ஓட்டுநர் உரிமம், வாக்காளர் அடையாள அட்டை, பள்ளி மாற்று சான்றிதழ் உள்ளிட்டவற்றை ஆவணங்களாக பயன்படுத்தலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.